**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மத்திய அரசின் தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கு சுய தொழில் தொடங்க கடனுதவி – அரசு உத்திரவாதத் தொகை ரூ.4.00 கோடியிலிருந்து ரூ.8.00 கோடியாக உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறானளிகள் நல(மா.தி.ந. 2)த் துறை

அரசாணை(நிலை) எண். 54 நாள்: 16–07–2010

ஆனி 32, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. அரசாணை எண். 174, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள். 8.11.2001.
2. அரசாணை எண். 441, நிதித் துறை, நாள். 8.11.2001.
3. 13.5.2010 அன்று சட்டப்பேரவையில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண்.5286/ மா.தி.ந.3.1/2010, நாள் 31.5.2010.

--------

**ஆணை:**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் மத்திய அரசின் தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மாநில அளவிலான நெறிப்படுத்தும் நிறுவனமாக (State Channelising Agency) தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகள் தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தில் கடனுதவி பெற ரூ.4.00 கோடிக்கு அரசின் உத்திரவாதம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் மானிய கோரிக்கையின் போது மாற்றுத் திறனாளிகள் நலத்திற்கென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை வெளியிட்டார். அவற்றுள் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் கடனுதவிகள் வழங்க மாநில அரசின் உத்திரவாதத் தொகையை (Government Guarantee) இரண்டு மடங்காக உயர்த்துதல் என்பதும் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளைவிட கூடுதல் எண்ணிக்கையில் மாற்றுத் திறனாளிகள் கடனுதவிகளைப் பெறும் வகையில் அரசு உத்திரவாதத் தொகையை (Government Guarantee) ரூ.4.00 கோடியிலிருந்து ரூ.8.00 கோடியாக உயர்த்துவது அவசியமாகிறது என்று மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி சிறப்பாக செயல்பட்டு இதுவரை 4773 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.10,70,97,870/– வரை கடனுதவி வழங்கியுள்ளது என்றும், அரசு உத்திரவாத தொகைக்கான 0.5% தரகு தொகை (Guarantee Commission) 6 மாதத்திற்கு ஒரு முறை ரூ.5,55,637/– செலுத்தப்பட்டுள்ளது என்றும், தற்போது, தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கியால் தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மேம்பாட்டுக் கழகத்திற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை ரூ.6,71,15,450/– ஆக உள்ளது என்றும், மேலும், மாற்றுத் திறனாளிகளிடமிருந்து கடனுதவி கோரி கையிருப்பில் உள்ள விண்ணப்பங்களின் மீது பரிசீலனை முடித்து தயாராக உள்ள விண்ணப்பங்களுக்கு கடன் வழங்கத் தேவைப்படும் தொகை ரூ. 2,00,45,500/– என்றும் மொத்த நிலுவைத் தொகை ரூ.8,71,60,950/– என்றும் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி சீரிய செயல்பாட்டின் காரணமாக 2006–2007 மற்றும் 2008–2009ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த நெறிப்படுத்தும் நிறுவனமாக மத்திய அரசின் தேசிய விருதினைப் பெற்றுள்ளது என்றும், 2009–2010ஆம் ஆண்டில் மட்டும் 2360 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.5 கோடியே 45 இலட்சம் வரை கடனுதவி வழங்கியுள்ளது என்றும், 2010–2011ஆம் ஆண்டில் 3000 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.7.00 கோடி கடனுதவி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், (NHFDC)அரசு உத்தரவாதத் தொகையினை கடந்து கடனுதவி வழங்க இயலாது என தெரிவித்துள்ளது என்று மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசிற்கு தெரிவித்துள்ளார்.

5. தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கடனுதவி கோரி விண்ணப்பிக்கும் அனைத்து மாற்றுத் திறனாளிகளுக்கும் முதலில் கடனுதவி அளித்து தேசிய மாற்று திறனாளிகளுக்கான மேம்பாட்டு கழகத்திடமிருந்து மறுநிதி எதிர்நோக்க இயலாது என்றும், மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பு பெற தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்திலிருந்து கடன் பெற்று வழங்க தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு ஒட்டு மொத்த அரசு உத்தரவாதத் தொகையினை குறைந்தபட்சம் இரு மடங்காக உயர்த்தி ரூ.8 கோடி வழங்க வேண்டியது அவசியமாகிறது என்று தெரிவித்து, உத்தரவாத தொகையினை ரூ.4.00 கோடியிலிருந்து ரூ.8.00 கோடியாக உயர்த்தி அரசாணை வெளியிடுமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பு பெற தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்திலிருந்து கடன் பெற்று வழங்க தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு அரசு வழங்கும் ஒட்டு மொத்த உத்தரவாதத் தொகையினை(Block Government Guarantee) ரூ.4.00 கோடியிலிருந்து ரூ.8.00 கோடியாக உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநருடன் இணைந்து மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் உரிய மேல்நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6ல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ள உத்திரவாதத் தொகைக்கு உத்திரவாதம் அளிப்பது தொடர்பாக நிதி (கடன் மற்றும் முன்பணம்) துறையால் தனியே ஆணை வெளியிடப்படும்.

8. அரசு உத்திரவாத தொகைக்கான தரகுத் தொகை (0.5%) (Guarantee Commission) 6 மாதத்திற்கு ஒரு முறை தவறாமல் அரசுக்கு செலுத்துமாறு, தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சந)/37337/10, நாள்16.7.10–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி, சென்னை–1.
மேலாண்மை இயக்குநர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், 12, ரெட் கிராஸ் பவன் செக்டார், பரிதாபாத்– 121 007.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.